இதழ்-90

01.12.2025

# துமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thu-

ஆசிரியர்
ச.சந்தோஷன்

இணை ஆசிரியர்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

செய்தியியலாளர்
ச.மதுஷா

வடிவமைப்பாளர்
ர.அபிரா
வ. குணநீதன்

திறனாய்வாளர்
கு.கீர்த்தனன்

# இவ்விதழில் துமித்தவை....

03 எமது மண்ணில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல். யாழ்ப்பாணத்தின் சர்வதேச அங்கீகாரமும் எதிர்காலத் தேவைகளும்

09 மார்கழிக் கோலங்கள்

12 நாவலரின் இறுதி நிமிடங்கள்

18 அதிகரித்து வரும் துஷ்பிரயோகமும் சிறுவர் பாதுகாப்பும் ஓர் பார்வை ....

24 இராவணன் – அறிவும் ஆட்சியும் இணைந்த மனிதச் சிந்தையின் மறுமொழி

31 நவராத்திரி விரதம் – மனநலமும் பிரயோக உளவியலும்

34 சென்னைக்கு இலாபமா? ராஜஸ்தானுக்கு அதிரஷ்டமா?



வாசகர்களுக்கு
நந்தார் தின நல்வாழ்த்துக்கள்



ஆசிரியர் பதிவு

# எமது மண்ணில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல்

## யாழ்ப்பாணத்தின் சர்வதேச அங்கீகாரமும் எதிர்காலத் தேவைகளும்

இலங்கைத் தீவின் பொருளாதாரம் மற்றும் உலகளாவிய அங்கீகாரத்தில் சுற்றுலாத்துறை ஒரு முக்கிய தூணாக உள்ளது. அண்மையில் கிடைத்த ஒரு மகத்தான செய்தி, இந்தத் துறைக்கு ஒரு புதிய உத்வேகத்தைக் கொடுத்துள்ளது. உலகளாவிய பயண ஊடக நிறுவனமான லோன்லி பிளானட் (Lonely Planet) அதன் 'Best in Travel 2026' என்ற இத்தாலியப் பதிப்பில், இலங்கையின் யாழ்ப்பாணத்தை, உலகில் பார்வையிடச் சிறந்த 25 நகரங்களில் ஒன்றாகப் பெயரிட்டுள்ளது. அதுவும் இந்த மதிப்புமிக்க பட்டியலில் இரண்டாவது இடத்தை யாழ்ப்பாணம் பெற்றிருப்பது, அதன் தனித்துவமான கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் உலகளாவிய ஈர்ப்பை மீளவும் உறுதிப்படுத்துகிறது.






ஒரு முக்கிய சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றதன் மூலம், யாழ்ப்பாணம் தனித்துவமான கலாச்சாரத்தைக் கொண்ட இடமாக உலக அரங்கில் பிரகாசிக்கிறது. இந்த மைல்கல், இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு ஒரு பொன்னான வாய்ப்பை வழங்கியுள்ளது. தேசத்தின் வருமானத்தில் பெரும் பங்கு சுற்றுலாத்துறை சார்ந்ததாக இருப்பதால், இந்தச் சர்வதேச கவனத்தை தக்கவைத்துக் கொள்வதற்கும், ஒட்டுமொத்த நாட்டின் சுற்றுலாத்துறையையும் மேம்படுத்துவதற்கும் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். எனவே, எமது மண்ணில் இத்துறையை மேலும் மேம்படுத்துவதற்கு, நாம் கவனம் செலுத்த வேண்டிய மூன்று அத்தியாவசியத் துறைகளை விரிவாக ஆராய்வோம்.

## 1.0 வரலாற்று மற்றும் கலாச்சார வழிகாட்டிப் பதிப்பகத்தை மேம்படுத்துதல்

சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு இடத்தைப் பற்றிய ஆழமான புரிதலை வழங்குவதில் தகவல் கையேடுகள் இன்றியமையாதவை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி, அவற்றைச் சிறிய, எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய கையேடுகளாக வெளியிடுவது ஒரு முக்கியமான நடவடிக்கையாகும்.

இலங்கையின் உத்தியோகபூர்வ மும்மொழிகளான தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் இந்தக் கையேடுகள் வெளியிடப்படுவது அவசியம். இது உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் இருவருக்கும் தகவல்களை அணுகுவதை உறுதி செய்யும். அண்மையில் வடமாகாணத்தின் பிரசித்தி பெற்ற அம்பாள் ஆலயங்கள் ஆவணப்படுத்தப்பட்டு ஒரு சிறிய கையேடாக ஆக்கப்பட்டமை மிகவும் வரவேற்கத்தக்க ஒரு முன்மாதிரி முயற்சியாகும். இதேபோன்ற முயற்சியை, சகல சுற்றுலா மையங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும்.



இந்த வழிகாட்டிக் கையேடுகள் உண்மையான வரலாறு, கலாச்சார முக்கியத்துவம், திறக்கும் மற்றும் மூடும் நேரங்கள், அணுகல் வசதிகள் போன்ற அனைத்து அத்தியாவசியத் தகவல்களையும் கொண்டிருக்க வேண்டும். இவை சுற்றுலாத் தலங்களில், விமான நிலையங்களில், ஹோட்டல்களில் மற்றும் புத்தகக் கடைகளில் இலகுவாகக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

சுற்றுலாப் பயணிகள் ஒரு இடத்தின் வரலாறு மற்றும் கலாச்சாரத்தை உணரும்போது, அந்த இடத்தின் மீதான மதிப்பு உயர்கிறது. இது அவர்கள் மீண்டும் வருவதற்கும், அந்த இடத்தைப் பற்றிப் பிறருக்கு எடுத்துரைப்பதற்கும் வழிவகுக்கும்.




## 2.0 சுற்றுலா வழிகாட்டிகளின் தரத்தை உறுதிப்படுத்தல்

ஒரு சுற்றுலா வழிகாட்டி, அந்த இடத்தின் முதன்மைத் தூ துவராகச் செயற்படுகிறார். சுற்றுலாப் பயணிகளின் அனுபவம் பெரும்பாலும் வழிகாட்டியின் அறிவு, தொழில்முறை மற்றும் நடத்தை ஆகியவற்றைப் பொறுத்தே அமையும். எனவே, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான வழிகாட்டிகள் சட்டபூர்வமாகப் பதியப்பட்ட நிறுவனங்கள் மூலமாகவே செயற்படுவதை கட்டாயமாக்க வேண்டும்.

இந்தச் சட்டபூர்வமான கட்டாயமாக்கல், வழிகாட்டிகளின் நம்பகத்தன்மையையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும். இது ஏமாற்று வேலைகள் மற்றும் தரமற்ற சேவைகளைத் தடுக்கும். மேலும், இந்த வழிகாட்டிகளுக்குப் பொருத்தமான பயிற்சி மற்றும் சான்றிதழ் திட்டங்கள் தேவை.



*அறிவுத் திறன் உறுதிப்படுத்தல்: அத்தகைய வழிகாட்டிகளுக்கு உண்மையான சுற்றுலாத் தலங்களின் வரலாறுகள் மற்றும் கலாச்சார முக்கியத்துவங்கள் தெரிந்திருப்பதை உறுதிப்படுத்த கடுமையான தேர்வுகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் மூலம்



உறுதிப்படுத்தப்பட வேண்டும். வரலாற்றுத் தகவல்களைத் திரித்துக் கூறுவது அல்லது தவறான தகவல்களை வழங்குவது ஒரு இடத்தின் நற்பெயருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

*பண்முகத்தன்மை மற்றும் மொழித் திறன்: வழிகாட்டிகள் ஆங்கிலம் மட்டுமல்லாமல், பிரெஞ்சு, ஜேர்மன், மாண்டரின் அல்லது ஜப்பானியம் போன்ற முக்கிய சர்வதேச மொழிகளில் தொடர்பு கொள்ளும் திறனைப் பெற்றிருப்பது பயணிகளின் அனுபவத்தை மேம்படுத்தும்.

*நடத்தைக் கட்டுப்பாடு: வழிகாட்டிகள் தொழில்முறை, மரியாதையான மற்றும் விருந்தோம்பல் நிறைந்த அணுகுமுறையைக் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களையும் அறிந்திருக்க வேண்டும்.
சுற்றுலா வழிகாட்டிகளின் தரத்தை மேம்படுத்துவது, இலங்கைக்கு வரும் அனைத்துப் பயணிகளுக்கும் சிறந்த மற்றும் நம்பகமான அனுபவத்தை வழங்குவதை உறுதி செய்யும்.

## 3.0 சுற்றுலாத் தலங்களில் தூய்மையைப் பேணுதல் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு

ஒரு சுற்றுலாத் தளத்தின் வெற்றிக்கு அதன் ஈர்ப்பு மற்றும் வரலாற்று முக்கியத்துவம் மட்டும் போதாது அதன் தூய்மையும், பார்வையாளர்களுக்கு வழங்கப்படும் வசதிகளும் முக்கியமானவை. சுற்றுலாத் தளங்கள் சுத்தமாகவும், அழகாகவும் இருக்க வேண்டும். இது ஒரு பொதுவான எதிர்பார்ப்பு மட்டுமல்ல, சிறந்த சுற்றுலா அனுபவத்திற்கான அடிப்படையாகும்.



இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, வடமாகாணத்தின் பிரசித்தி பெற்ற புனிதத் தலமான கீரிமலைக் கடற்கரை. இது ஒரு புனிதப் பிரதேசமாக இருந்தாலும், இந்துக்களின் இறுதிக் கிரியைகள் நடைபெறும் இடமாக



இருக்கும் கற்பாறைகள் நிறைந்த பகுதி, போதுமான தூய்மையின்றி காணப்படுகிறது. இந்தியாவில் காசி, ராமேஸ்வரம் போன்ற புண்ணியத் தலங்களுக்கு இணையாக இறுதிக் கிரியைகள் செய்வதற்கு இங்கு பெருமளவான மக்கள் வருகை தருகின்றனர். ஆனால், இந்தத் தூய்மையின்மை மற்றும் இடையூறுகளால் மக்கள் கவலைப்பட்டுச் செல்வதைக் காண முடிகிறது.வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த இடம், மகாத்மா காந்தி அவர்களின் அஸ்தியும் கரைக்கப்பட்ட ஒரு புனித இடமாகும். அத்தகைய மகத்தான வரலாற்றுச் சிறப்புமிக்க இடம் உடனடியாகத் தூய்மையாக்கப்பட வேண்டும். குப்பைகளைச் சேகரித்து அகற்றுவதற்கான முறையான வழிமுறைகள், நவீன கழிப்பறை வசதிகள், உட்காரும் இடங்கள் மற்றும் போதுமான வெளிச்சம் ஆகியன கீரிமலையிலும் மற்ற முக்கிய சுற்றுலாத் தளங்களிலும் அமைக்கப்பட வேண்டும்.

* குப்பையகற்றல் திட்டம்: அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் குப்பைத் தொட்டிகள் போதுமான அளவு வைக்கப்பட வேண்டும். சுற்றுச் சூழல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட வேண்டும்.

* உட்கட்டமைப்பு வசதிகள்: சுத்தமான குடிநீர் வசதி, வாகன நிறுத்துமிடங்கள், பாதுகாப்பான நடைபாதைகள் மற்றும் சுகாதார வசதிகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளைப் பேணுவது அவசியம்.

* பாதுகாப்பு ஏற்பாடுகள்: சுற்றுலாத் தளங்களில் பாதுகாப்பு மற்றும் முதலுதவி வசதிகள் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

தூய்மையான மற்றும் நன்கு பராமரிக்கப்படும் சுற்றுலாத் தளங்கள்தான் எமது சுற்றுலாப் பயணிகளை விரும்பி மீண்டும் வரவழைக்கும். இலங்கையின் வருமானத்தில் பெரும் பங்கு இந்தத் துறையைச் சார்ந்திருப்பதால்,



இந்த அங்கீகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஒட்டுமொத்தத் துறையையும் நிலையான முறையில் மேம்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

வரலாற்று வழிகாட்டிக் கையேடுகளை மும்மொழிகளிலும் வெளியிடுதல், சட்டபூர்வமான மற்றும் உண்மையான வரலாறு அறிந்த வழிகாட்டிகளை மட்டுமே அனுமதித்தல், அத்துடன் கீரிமலை போன்ற முக்கிய புனித இடங்கள் உட்பட அனைத்து சுற்றுலாத் தளங்களின் தூய்மை மற்றும் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் போன்ற மேற்கூறிய வழிகளில் கவனம் செலுத்துவது, இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு ஒரு புதிய சகாப்தத்தைத் திறந்துவிடும்.

இந்தத் துறைகள் அபிவிருத்தி செய்யப்பட்டால், நாம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு சிறந்த, பாதுகாப்பான, மற்றும் மறக்க முடியாத அனுபவத்தை வழங்குவோம். இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், உலக அரங்கில் இலங்கையின் பெருமைக்கும் வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த வாய்ப்பை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம், எதிர்காலச் சந்ததியினருக்காக ஒரு நிலையான மற்றும் செழிப்பான சுற்றுலாத் துறையை உருவாக்க முடியும்.






மார்கழி ஒரு தெய்வீக மாதம். இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் முக்கியமானதாக உள்ளது. இதனால்த்தான் கிருஷ்ண பரமார்த்மா "மாதங்களில் தான் மார்கழி" என்று கூறியுள்ளார். அவ்வாறான சிறப்புக்கள் நிறைந்த மார்கழி மாதத்தில், சில்லென்ற பனியின் ஆதிக்கம் நிறைந்திருக்கும் அதிகாலை நேரத்தில், பெண்கள் தங்கள் வீட்டு வாசலில் பெரிய கோலம் இடுவார்கள். மிகச்சில கிராமங்களில் வசிக்கும் பெண்கள் இன்றும் இதை பின்பற்றி வருகிறார்கள். வாழ்க்கை முறை மாற்றத்தால், நகர்ப்புறங்களில் குறைந்துவிட்ட கோலமிடும் வழக்கம், மார்கழி மாதத்தில் மட்டும் ஆங்காங்கே எட்டிப்பார்க்கும்.

மாட்டு சாணம் தரையை ஈரப்படுத்த பயன்படுத்தப்படுகிறது. சில கலாச்சாரங்களில், மாட்டு சாணம் நுண்ணுயிர் எதிப்ப்பு பண்புகளை கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது, எனவே வீட்டிற்கு பாதுகாப்பு வழங்குகிறது. இந்த மாட்டுச் சாணத்தால் மெழுகிய தரையில் மாவினால் கோலம் போடுவதை பழந்தமிழர் வழக்கமாக வைத்திருந்தார்கள்.



அரசர்கள் போரில் வெற்றி பெற்று நாடு திரும்புகின்ற நேரங்களில் ஆரத்தி எடுத்து, அந்நீரை வாசலில் உள்ள கோலத்திற்கு கொண்டுச் சென்று கொட்டும் பழக்கம் இருந்துள்ளது. அதே போல் மகாபாரதம், இராமாயாணம் போன்ற இதிகாச நூல்களில் கோலங்கள் இடம்பெற்றுள்ளன.

அதுமட்டுமல்லாமல் வாசலில் கோலமிடுவது தமிழரது மரபாக கடைபிடிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் மூலிகைகள், மருதாணிப் பொடி, பச்சிலைப் பொடி, மஞ்சள் பொடி, பல வகை மலர்களைக் காயவைத்து சேகரித்துப் பொடி ஆகியவற்றைக் கொண்டு கோலங்கள் வரையப்பட்டிருக்கின்றன.

கோலங்கள் வெறுமனவே அழகுக்காக மட்டும் போடப்படுபவை அல்ல. அரிசிப் பொடி, ஊறவைத்து அரைத்த பச்சரிசி மாவு இவற்றால் இடப்படும் கோலங்கள்தான் உயிரினங்களுக்கு உணவு கொடுப்பவை. எறும்புகள் தொடக்கம் பல பறவையினங்களுக்கும் வயிறார சத்தான உணவை அளிப்பவை இந்த கோலங்கள் ஆகும். அதிலும் மழைகாலமான மார்கழியில் உணவு கிடைப்பது உயிரினங்களுக்கு சிக்கலாக இருக்கும் என்றும் இதனை இலகுபடுத்தவே மார்கழிக் கோலங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் கருதுவோரும் உண்டு.

புனையா ஓவியங்கள் என்றும் வண்ண ஓவியங்கள் என்றும் குறிப்பிடப்படும் கோலங்கள் செடியில்லாமலே பூக்கும் பூக்கள் என்றும் கருதலாம். மேனியைக் குங்குமத்தாலும் சந்தனத்தாலும் அழகுபடுத்துவதுபோல் பூமியை இந்தக் கோலங்கள் அழகுபடுத்துகின்றன என்பதால் இதற்குத் தொய்யில் என்றும் ஒரு பெயர் இருக்கிறது. கோலம் போடுவது பூமிக்கு செய்யும் மரியாதை ஆகும்.

சைமேடிக்ஸ்“ என்ற சிறப்பு அறிவியல் கூற்றின்படி, ஒரு வடிவத்தை வண்ணங்கள் மூலமாக அலங்கரிக்கும்பொழுது, அதில் இருந்து நேர்மறை சக்தி மற்றும் அமைதி கிடைக்கும். இந்தக் கூற்றை உறுதி செய்வது நமது பாரம்பரிய கோலங்கள். கோலம் மங்களகரமான வடிவமாக பார்க்கப்படுகிறது. வீடுகளில் கோலம் இடும்போது, அதைப் பார்ப்பவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும். கோலங்களை எளிதாக வரைந்து விட முடியாது. அந்தந்த வடிவங்களுக்கு ஏற்றவாறு, கைகளை வளைத்து போடும் போது மட்டுமே நமக்குத் தேவையான வடிவம் கிடைக்கும்.



கோலங்கள் இடுவது கைகளுக்குப் பயிற்சியாகவும் கருதப்படுகிறது. அதிகாலையில் பிரம்ம முகூர்த்தத்தில் குனிந்து நிமிர்வதால் உடற்பயிற்சி செய்வது போலவும் ஆகும். அதே நேரம் நடுப்புள்ளியில் தொடங்கி, தேவைக்கேற்ப வட்டமாகவோ, முக்கோணமாகவோ நீட்டப்படும் கோலங்கள் மூளைக்கு நல்ல வேலையையும் வழங்குகின்றன. பொதுவாக கோலத்தின் நடுவில் பூசணிப் பூ வைக்கப்படுகிறது. பூசணிப் பூவின் மகரந்த வாசனை உடலுக்கு இதத்தைக் கொடுக்கும்.

இன்று எல்லாவற்றுக்கும் மாற்றீடாக சில எளிய வகைகள் வந்திருப்பது போல இந்தக் கோலங்களுக்கும் வந்திருக்கின்றன. அதுதான் ஸ்டிக்கர் கோலங்கள்! குனியத் தேவையில்லை, வளையத் தேவையில்லை, ஒரு முறை ஒட்டி விட்டால் பல நாள் கிடக்கும். ஆனால் பயன்தான் என்ன? பாரம்பரிய கோலத்தின் தனித்துவமும் மகத்துவமும் கிடைக்குமா? எறும்புக்கு உணவு கிடைக்குமா? அதிகாலை உடற்பயிற்சி கிடைக்குமா? சிந்தனாசக்தியுடன் கோலம் போட்டு முடித்த ஆத்ம திருப்தி கிடைக்குமா? எதுவும் இல்லை! ஆக, ஸ்டிக்கர் கோலங்கள் எறும்புகளை மட்டும் ஏமாற்றும் வேலையல்ல! எங்களை நாங்களே ஏமாற்றும் வேலை!

கோலம் போடுவதற்கும், நம் வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. கோலம் போடும் போது கோடுகள் கோணல் மாணலாக இருந்தாலும் போட்டு முடித்தபின்பு எப்படிக் கோலாகலமாக அழகுடன் இருக்கிறதோ அதுபோல ஒவ்வொரு விடயத்திலும் நாங்கள் எடுக்கும் முயற்சிகள் சில வேளை குழப்பமாக மற்றவர்களுக்கு தெரியலாம்ஆனால் நாம் தெளிவான சிந்தனையோடு தொடர்ந்து முயற்சித்தால் இறுதியாக வரும் அழகான கோலம் போல எமது முயற்சியும் அழகான வெற்றியை தரும்.




**எனவே கோலங்கள் நிலத்தை மட்டுமல்ல எங்கள் நலத்தையும் அழகாக்கும்!**

# நாவலரின் இறுதி நிமிடங்கள்

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களால் எழுதப்பட்ட 'சைவத் தமிழர்களின் கலங்கரை விளக்கம்' எனும் நூல் அகில இலங்கை இந்து மாமன்றந்தால் வெளியிடப்பட்டது. அந்த நூலின் ஒரு பகுதி நாவலர் பெருமான் குருபூசை வருவதை முன்னிட்டு (10.12.2025) பிரசுரிக்கப்படுகிறது.**



நாவலர் பெருமான் கடிகாரம் ஓடும்முன் ஓடி கணப்பொழுதும் நற்காரியங்களை நிறைவேற்றியவர். நீதி நெறியில் நின்று நேர்மையாக பணி செய்தவர். ஒவ்வொரு நிமிடத்தையும் பெறுமதியாக செலவு செய்தவர். சைவமும் தமிழும் நின்று நிலை பெற வேண்டுமென்ற குறிக்கோளோடு இமைப்பொழுதும் செயற்பட்டவர். சேர். பொன்.இராமநாதனை சட்ட மன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்று சிபார்சு செய்தவர். ஆனால் தனக்கு ஒரு பதவியையோ படோபகார வாழ்வையோ தேடாதவர். கால்நடையாகவும், பாய்க்கப்பலிற் பயணம் செய்தும் இரவு பகல் ஓய்வின்றி பாடுபட்டவர். அவர் வாழுங் காலத்தில் எம் சமூகத்திற்கு அவர் பெருமை விளங்கவில்லை. அன்று மின்சார வசதியில்லை, சீரான போக்குவரத்து வசதியில்லை, ஏடு எழுத்தாணி, மைதொட்டு எழுதும் பேனாக்குச்சி, கடதாசி, கால்களால் இயங்கும் இலுப்பெண்ணை விளக்கு, மிஷனரியின் கெடுபுடி, இவற்றுக்குள்ளும் இம் மனிதன் 75 க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி, அச்சிட்டு, வெளியிட்டவர் என்றால் வியப்பாகவே இருக்கின்றது. அவர் உயிர் பிரிகின்ற போது அவர் கையால் எழுதிப் புதுப்பிக்காத புத்தகங்கள் ஆறு ஆயத்தமாக இருந்தன. நித்திரையிலும், அவர் நிம்மதியாக இருந்திருக்கமாட்டார். அவர் ஸ்தாபித்த பாடசாலை, ஆசிரியர் வேதனம், அச்சுக்கூட பணி, தன்னை நோக்கி வியாக்கியானம், செய்பவர்களுக்குப் பதில், சில நீதிமன்ற வழக்குகள் இப்பெருமகனைச் சூழ்ந்திருந்தன. ஆறுமுகநாவலர் அகத்தாலழுத நாட்கள் நிறையவே உண்டு. புற சமயத்தவர்களால் அகம் நொந்ததை விட எம்மவர்களாலேயே அகம் நொந்து வெதும்பிய நாட்களும் உண்டு.

சுயசரித்திரத்தை அவர் எழுதவில்லை. ஆனால் அவரது அகவேதனையை வெளியிட்டிருக்கின்றார். என்னைப் போல் ஒருவர் எதிர்காலத்தில் எம் சமயத்திற்குக் கிடைப்பாரா என்று கவலைப்பட்டுள்ளார். தன் ஆயுள் முடிவதற்கிடையில் தன் சிந்தனையில் எழுந்த விடயங்கள் நிறைவேறுமா என எண்ணிக் கவலைப்பட்டுள்ளார். 1870ஆம் ஆண்டு நாவலர் தன்னகத்தில் சுமந்த சில விடயங்களை சுருக்கமாக எழுதி வெளியிட்டார். அவற்றில் ஒரு பகுதியை இந்நூலைப் படிப்பவர்கள் வாசித்துணர்வதற்காகச் சேர்க்கப்பட்டுள்ளது.

வீடு விளைநிலம் தோட்டம் ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது. என் சென்ம தேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்குங் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசை யாம். இப்பேராசையினால் இருபது வருஷகாலம் நான் செய்த முயற்சிகள் பல, அவைகளுள்ளே சித்திபெற்றவை மிகச் சில. சைவ சமயிகள் யாவரும் சைவசமயத்திலே சிரத்தையுடையவர்களாகித் தங்களால் இயன்ற உதவி செய்தார்களாயின். நான் எடுத்த முயற்சிகளெல்லாம் இதற்கு முன்னரே நிறைவேறி விடும். நிறைவேறின், என்னைப் போலவே பிறரும் அங்கங்கே நன்முயற்சிகளைச் செய்வார்கள். செய்யிற் கல்வியும் சமயமும் தழைத்தோங்கும்.

தன்னிம்மைப் பயன்களெல்லாம் இகழ்ந்தும் கைம்மாறு வேண்டாதும் இருபது வருஷகாலம் சமயவிருத்தியின் பொருட்டு முயற்சி செய்பவன் ஒருவன் மற்றைச் சமயத்தார்களுள் இருப்பானாயின், அவன் எடுத்த முயற்சிகளுள் யாது சித்தி பெறாது? நம்முடைய சைவசமயிகள், தங்கள் சமயமும் பாஷையும் விருத்தியடையும் பொருட்டு நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவி செய்யாமை மாத்திரையின் அமையாது, பெரும்பான்மையும் அவமதிப்பும் இடையூறுமே செய்கின்றார்கள். இதனால் எனக்கு யாதாயினும் ஓர் குறைவு உண்டு என்னுங் கவலை எனக்குச் சிறிதும் இல்லை. எனக்குச் செய்யப்படுவனவற்றைக் காணுந்தோறும் கேட்குந்தோறும், பிறருக்குத் தமிழ் கற்றலின் கண்ணும் தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தலின் கண்ணும் ஊக்கங்கிளராவண்ணம் தடைவிளைகின்றதே என்னுங் கவலை எனக்குப் பெரிதுமுண்டு. பூர்வகாலத்திலே சைவசமய விருத்திப் பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சுவசமயிகளாலே நன்கு மதிப்பும் பரசமயிகளாலே இடையூறும் செயப்பட்டன. தற்காலத்திலே

சைவசமயவிருத்திப் பொருட்டு முயலும் சிறியேனுக்குச் சைவசமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செயப்படுகின்றன. பரசமயிகளோ எனக்கு இடையூறு செய்யவில்லை, என்னை அவமதிக்கவுமில்லை.

இஃதென்னையாச்சரியம்!!! சைவசமயவிருத்திப் பொருட்டு முயலும் எனக்கு நம்மவர்களாலே அவமதிப்பும் இடையூறும் செய்யப்பட்ட போது. நான் தமிழ்க் கல்வியிலும் தமிழ்க்கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளிலும் போக்குங் காலத்தை முன் பயின்ற இங்கிலிஷிலேயே போக்கி உத்தியோகமும் செல்வமும் பெற்று நம்மவர்களாலே நன்கு மதிக்கப்படல் வேண்டும் என்று விரும்பா வண்ணம் திருவருள் சுரந்த சிவபெருமானது பெருங்கருணைத் திறத்தை மறவாதிருத்தலே வாய்ப்புடைத்தாயதோர் பெருஞ் செல்வம். இஃதிங்ஙனமாக.

நிலையில்லாத என்சரீரம் உள்ள பொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னுங் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது. தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கியஸ்தலந்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப்பிரசாரணஞ் செய்வித்தலுமே யாம். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிரசாரகர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினாலே, நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் விருப்பமும் இடையறா முயற்சியும் ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம் வஸ்திரம் முதலியவை கொடுத்து, உயர்வாகிய இலக்கண விலக்கியங்களையும் சைவசாத்திரங்களையுங் கற்பித்தல்வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்.

“நான் ஜய (வருடம்) (1834) முதலாகப் பீற்றர் பார்சிவள் துரையுடைய இங்கிலீஷ் வித்தியாசாலையிலே இங்கிலீஷ் கற்றேன். பிலவ (ளூ) (1841) பார்சிவல் துரைக்குத் தமிழ்ப்பண்டிதனாயினேன். பிதிரார்ச்சிதம் நான் பெறவில்லை. என்னுடைய தமையன்மார்கள் நால்வரும் இயன்ற மட்டும் பொருளும் உத்தியோகமும் உடையவர்களாயிருப்பவும், அவர்கள் பொருளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும், மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலக (?) புரட்டாதி மீ (1843) பரித்தியாகஞ் செய்தேன். பார்சிவல்துரை ”நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன், தாங்கள்

என்னை விடலாகாது” என்று பலதரம் வற்புறுத்திச் சொல்லிய வழியும், நான் அவ்விருத்தியில் விருப்பம்வைக்கவில்லை. நான் இங்கிலிஷிலே அற்பவிற்பத்தியாயினும் பெற்றிருந்தும், என்னோடு இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் எனக்குப்பின் இங்கிலி கற்றவர்களுள் அநேகர் தங்கள் தங்கள் சத்திக்கேற்ற உத்தியோகம் பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என்சத்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்கும் என்றறிந்தும், அஃ. தில்லாமையால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும், உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க் கல்வித் துணைமாத்திரங்கொண்டு செயப்படும் உத்தியோகம் வலிய வாய்த்தபொழுதும், அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது...”

இப்படிக் கவலைப்பட்ட நாவலர் பெருமான் 1879ஆம் ஆண்டு பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் நாவலர் பெருமானுக்கு இறை அழைப்புக் காத்திருந்தது. ஆடி மாதம் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூஜைக்குப் பின் எந்தவொரு பிரசங்களும் அவர் செய்யவில்லை. சில எழுத்து வேலைகளை நிறைவேற்ற வேண்டும் என்று அவரது உள்ளுணர்வு சொன்னது. நாவலரின் தமையனாரின் மகன் த. கைலாசபிள்ளையை தனக்கருகே இருத்தி சில விடயங்களை எழுதுவித்தார்.

கடைசிக் காலம் அவருடைய உள்ளத்திற்கவலை நிறைந்திருந்தது. கார்த்திகை மாதம் சிவபதமடைவதற்கு ஒரு வாரத்திற்கு முன் தான் வசித்த வண்ணார் பண்ணை வீட்டில் நடு அறையில் சுற்றிச் சுற்றி திருவாசகம் பாடிக் கொண்டிருந்தார். சில விடயங்கள் எழுத வேண்டும் நாளை உதயத்தில் வா எனத் தன் பெறா மகன் கைலாசபிள்ளையை முதல் நாள் வருமாறு சொன்னவர். அவர் வந்து காத்திருந்த வேளை கைலாசபிள்ளையைக் கவனியாது திருவாசகத்தை ஓதிய வண்ணம் பரவசமாயிருந்தார். அவசரமாக எழுத வேண்டும் என்று அழைத்தவர் எழுதவில்லை. இவருக்குத் தன் மரணம் பற்றிய நிலை தெரிந்து விட்டது போலும். இரண்டு நாட்களாக திருமுறைகளைப் பாடுவதோடு மட்டும் நேரத்தைச் செலவு செய்துள்ளார். செவ்வாய்க்கிழமை இரவு நோயினால் பாதிக்கப்பட்டவர். புதன்கிழமை எழுந்து நீராட முடியாதளவு போய் விட்டது. வேதாரணியத்துச் சைவச்சிவாச்சாரியாரை அழைத்து இவர் நித்திய பூஜை செய்யும் சிவலிங்கத்திற்குப் பூஜை நடைபெற்றது. பூக்களைக் கையிலேடுத்து ஒவ்வொன்றாகச் சிரசிற் போட்டு தன்பாட்டிற் கும்பிட்ட வண்ணமிருந்தார். தன்னைச் சூழ

இருந்தவர்களைப் பார்த்து தொடர்ந்து திருமுறைகளைப் பாடுங்கள் என்று கட்டளையிட்டார். எவரும் நாவலர் இறக்கப் போகின்றார் என்று கருதவில்லை. வெள்ளிக்கிழமை சிதம்பரம், காசி, மதுரை, திருச்செந்தூர் முதலிய புண்ணிய தலங்களின் விபூதியை எடுத்து அணிந்தார். தான் அணியும் உருத்திராட்ச மாலைகளையும் அணிந்து கொண்டு தன் பூஜை அறையில் இருந்த கங்கைத் தீர்த்தத்தை பருகினார். சயனிக்கும் இடத்திற் தலையிற் கைகளைக் கூப்பிய வண்ணமாகக் கண்களை மூடித் தியானஞ் செய்தார். கார்த்திகை மாதம் 21ஆம் நாள் மக நட்சத்திரத்தில் இரவு 10 மணியளவில் அன்னாரது உயிர் பிரிந்தது. இவர் உயிர் பிரிவதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன் இவரை அவதானித்த மாணாக்கர்கள், சுற்றத்தார்கள் இவருக்குச் சமீபமாகச் சென்று இவரிடம் சில விடயங்களைக் கேட்க முற்பட்டனர். வித்தியாசாலை விடயமாக என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர். ”கைலாசபிள்ளையைக் கூப்பிடுங்கள்” இதுதான் அவரது கடைசி வார்த்தை. அதன்பின் அவர் பேசவே இல்லை. என்ன சொல்ல நினைத்தார் என்று இன்றுவரை தெரியவில்லை.

நாவலர் பெருமான் 56 வயது பதினொரு மாதம் 16 நாள் இப்பூவுல வாழ்வை நிறைவு செய்தார். வெள்ளிக்கிழமை இரவு சிவபதமடைந்த நாவலர் பெருமானைச் சனிக்கிழமை அவரது கைலாசபிள்ளையார் கோயிலுக்குச் சமீபமாக உள்ள அவரது வீட்டில் அந்திமக் கிரியைகள் நடாத்தப்பட்டன. பெருந்திரளான மக்கள் கூடி நாவலர் பெருமானுக்குக் கண்ணீர்க் காணிக்கை செலுத்தினர். வரணி, கரணவாய் ஆதினத்தார் முன்னிலையில் வேதாரணியத்து அப்புக் குருக்கள் எனப்படும் நமச்சிவாயத் தேசிகரால் நிர்வாண அந்தியேட்டி செய்யப்பட்டு, அவரது வீட்டிலும் வண்ணார் பண்ணைக் கோம் பயன் மணற் சுடலையிலும் தேசிகராற் கிரியைகள் நிறைவேற்றப்பட்டது. நாவலரது இறுதி ஊர்வலத்திற்காக பூக்களினால் ஒரு பூந்தேருக்குப் பின்னால் நூற்றுக்கணக்கான அன்பர்கள் நாவலரது பிரிவுத் துயர் தாங்க முடியாது. அங்கப் பிரதட்சணமாக சுமார் 3 ½ மைல் தூரச் சென்று சுடலையை அடைந்தனர் என்பது வரலாற்றில் மறக்க முடியாத உருக்கமான ஒரு நிகழ்வு .கோம்பயன் மயானத்தில் இராத்திரிவேளை சந்தனக் கட்டைகளடுக்கி ஆயிரக் கணக்கான மக்கள் கதறியழ நாவலரின் பூதவுடல் அக்கினியோடு சங்கமமாகியது.

தன் “நானுயி ரோடிருக்குப் போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள் உங்களிடத்துக் கைம்மாறு பெறுதலை சிறிதும் எண்ணாது 32 வருடகாலம் சைவ சமய உண்மைகளை போதித்து வந்தேன்“ இவை நாவலரின் கடைப் பிரசங்க வாசகங்கள், நாவலரைப் போல் நமக்கு யாருண்டு. நாவலரின் வாழ்வு உண்மையானது. நாவலர் பெருமானுக்கு பல நினைவுச் சின்னங்கள் இன்று வரை நிறுவப்பட்டு வருகிறது. அவர் வாழுங் காலத்தில் அவருக்குச் சிலர் செய்த இடையூறுகளை நினைத்து நாம் வெட்கமடைய வேண்டும். அவரால் எம் சந்ததி பெற்ற பேறுகள் ஏராளம். ஈழநாட்டில் சைவமும் தமிழும் என்று நிலை பெற்று உள்ளதென்றால் அதற்கு இப்புண்ணியவானே முக்கிய காரணம் என்பதை அனைவரும் உணர வேண்டும். அப்பெருமானின் சரித்திரத்தை, சிறப்புகளை, சாதனைகளை, அனைவரும் முழுமையாக படிக்க வேண்டும். சைவ பாடசாலைகள், சைவ நிறுவனங்கள் அனைத்திலும் நாவலர் நினைவுச் சின்னங்கள் நிறுவப்பட்டு நாவலர் பெருமானை எம் சந்ததி மூல நினைப்பதற்கு நாம் வழி செய்ய வேண்டும்.





# அதிகரித்து வரும் துகஷ்பிரயோகமும் சிறுவர் பாதுகாப்பும் ஓர் பார்வை ......

செல்வி. தட்க்ஷாயினி யோகேஸ்வரன்
உளவியல்துறை மாணவி
நான்காம் வருடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மனித பிறப்பின் அடிப்படையான காலமாக சிறுவர் பராயம் காணப்படுகின்றது. எதிர்கால சமூகத்தின் அடிநாதங்களாக திகழ்பவர்கள் சிறுவர்கள் ஆகும். சிறுவர்கள் எனப்படுவோர் 18 வயதிற்கு உட்பட்டவர்களாக கருதப்படுவர் என்று ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமை சமவாயம் வரையறுத்துள்ளது. சிறுவர்களை மகிழ்விக்கும் விதமாக ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் முதலாம் திகதி சிறுவர் தினமாக கொண்டாடப்படுகிறது. இன்றைய சிறுவர்களே நாளைய சமூகத்தின் நட்சத்திரங்களாக பிரகாசிப்பவர்கள். சிறுவர்களை பாதுகாப்பதும் அவர்களை சரியான வகையில் வழிநடத்துவதும் காலத்தின் அவசியமாக விளங்குகிறது. சிறுவர்களை பாதுகாப்பதற்காக சிறுவர் உரிமைகள் ஐக்கிய நாடுகள் சபையினால் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி சர்வதேச சட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் உறுப்புரை 1- 40 வரை சிறுவர்களுக்கான உரிமை பற்றி குறிப்பிடுகின்றது. சிறுவர்களுக்கான உரிமைகள் தொடர்பான அறிவு அவர்களை பாதுகாப்பதற்கு துணை புரியும்.

சிறுவர்களுக்கான உரிமைகள் மீறப்படும் போது அவை தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படும்.

## சிறுவர் துஷ்பிரயோகம்



இன்றைய காலத்தில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பாரிய சவால்களில் ஒன்றாக துஷ்பிரயோகம் காணப்படுகிறது. உலக நாடுகளிலும் சிறுவர்களின் வாழ்வை சீரழிக்கும் செயற்பாடாக காணப்படுகிறது. சிறுவர் துஷ்பிரயோகம் என்பது ஒரு சமூகப்பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. நாளாந்தம் பல்வேறு துஷ்பிரயோகங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இருப்பினும் பல சம்பவங்கள் வெளிவராமல் மறைக்கப்படும் சம்பவங்களும் நடந்தேறுகின்றன.

இலங்கையில் 2011 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில் 89405 சிறுவர் துஷ்பிரயோகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. வறுமை, குடும்ப வன்முறை மற்றும் போதைப்பொருள் பாவனை போன்ற காரணங்களினால் அதிகளவு சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வருகின்றன.

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களை அவர்களின் இயல்புகளுக்கும், தன்மைகளுக்கும் முரணாகப் பிழையாகப் பயன்படுத்துதல் எனப்படும். சிறுவர்களை உடல் ரீதியாக அல்லது உணர்வு ரீதியாகப் பாதிப்படையச் செய்தல், பாலியல் துஷ்பிரயோகம், புறக்கணித்தல், வர்த்தகம் அல்லது வேறு விடயங்களுக்காக அவர்களைச் சுரண்டல் போன்றவற்றின் மூலம் அவர்களின் ஆரோக்கியம், உயிர் வாழ்தல், வளர்ச்சி மற்றும் கௌரவம் போன்றவற்றுக்குப் பாதிப்பை ஏற்படுத்துதல் சிறுவர் துஷ்பிரயோகம் ஆகும். (WHO)




சிறுவர் துஷ்பிரயோகம் என்பது பல்வேறு வடிவங்களில் நிகழக்கூடும். முக்கியமாக இவை மூன்று வகைகளில் நோக்கப்படுகிறது.

- உடல் ரீதியான துஷ்பிரயோகம்
- உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகம்
- பாலியல் ரீதியான துஷ்பிரயோகம்

உடல் ரீதியான துஷ்பிரயோகங்களாக அடித்தல் துன்புறுத்தல் காயப்படுத்தல் அங்கங்களை சேதப்படுத்தல் போன்ற உடலளவில் துன்பங்களை எதிர்கொள்ளும் செயற்பாடுகள் ஆகும். உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகம் என்பதனுள் சிறுவர்களை உள ரீதியாக பாதிப்பினை ஏற்படுத்தும் செயற்பாடுகளைக்குறிக்கும். எடுத்துக்காட்டாக, தனிமைப்படுத்தல், அவமானப்படுத்தல், சாபமிடுதல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

பாலியல் ரீதியான துஷ்பிரயோகமானது தற்காலத்தில் பாரியளவில் நிகழ்வதை நாளந்தம் அறியக்கூடியதாக உள்ளது. சிறுவர்களின் பாலியல்பை மையமாகக்கொண்டு அவர்களது விருப்பத்திற்கு மாறாகவோ அல்லது கட்டாயத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் எந்தவிதமான பாலியல்சார் செயற்பாடுகளும் பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் எனப்படும். தொடுதல் பாலியல் சொற்களை பயன்படுத்தல் ஆபாசபடம் பார்ப்பதில் ஈடுபடுத்தல் என்பன அடங்கும். சிறுவர்களது எதிர்காலத்தை சிதைக்கும் எதிர்மறையான செயற்பாடாக காணப்படுகிறது. இது குறுகிய மற்றும் நீண்ட கால உடல் உள மற்றும் நடத்தைசார்ந்த விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

## பாதுகாப்பு பொறிமுறைகள்

“இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்” என்பதால் அவர்களை பாதுகாத்து சரியான பாதையில் வழிகாட்டுவது அனைவரது கடமையாக காணப்படுகிறது. சிறுவர்களது உரிமைகளை மீறும் விதமாக இடம்பெறும் துஷ்பிரயோகங்களை உரிய முறையில் இனம் கண்டு எதிர்கால சமூகத்தை பாதுகாப்பதற்கு துணைபுரியும். அந்தவகையில்

- பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கண்காணிப்பில் வைத்திருத்தல் -

18 வயதிற்குட்பட்ட சிறுவர்களை பெற்றோர்கள் தங்களுடைய கண்காணிப்பில் வைத்திருப்பது அவசியமாகும். பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் யாருடன் பழகிறார்கள் என்பன தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியமாகும். பிள்ளைகளுடன் நண்பர்களை போல பழக வேண்டும். நாளந்தம் அவர்களுடன் நடந்தவற்றை கேட்டறிய வேண்டும். இதனுாடான அவர்களை பின் தொடர முடியும்.

- பாதுகாப்பான சூழலை உருவாக்குதல் -

பாதுகாப்பான சூழல் என்பது அனைவருக்கும் அடிப்படையானதாகும். சிறுவர்களது பாதுகாப்பிற்கு ஏற்ற வகையில் வீடு, வசிக்கும் சூழல் மற்றும் பாடசாலை போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். ஏனெனில் சிறுபராயத்தை சேர்ந்தவர்களுக்கு எது நல்லது கெட்டது என்பதை பகுத்தறியும் பக்குவம் கிடையாது. ஆகவே அவர்களுக்கான பாதுபாப்பான சூழல் என்பது அவசியமானதாகும். பிள்ளையை அந்நிய நபர்களுடன் அல்லது அவர்களை விட பெரியவர்களுடன் அதிகளவு நெருக்கமாக இருப்பதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுமாயின் அதை இனம் கண்டு பிள்ளைக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தல் வேண்டும். சிறுவர்களுக்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் முதன்மையான பங்கு குடும்பத்திற்குரியதாகும்.

- தகுந்த மற்றும் தகாத தொடுகை தொடர்பில் விழிப்புணர்வூட்டல் -

சிறுபிள்ளைகளுக்கு பொம்மை ஒன்றை பயன்படுத்தி உடல் உறுப்புக்களை பெயரிட கற்றுக்கொடுத்தல் வேண்டும். அதன் பின் நல்ல தொடுகை விரும்பத்தகாத தொடுகை மற்றும் கெட்ட தொடுகை என்பன தொடர்பாக சொல்லிக்கொடுத்தல் வேண்டும். உங்களுடைய உடல் உங்களுக்கு மட்டுமே சொந்தமானது. பாதுகாப்பற்ற முறையில் வேறொருவர் உங்களை அணுக முற்படும் போது வேண்டாம் (No) என்று மறுக்க வேண்டும். பிள்ளைகள் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் அவர்களுக்கு சொல்லிக்கொடுத்தல் வேண்டும். அது மட்டுமல்லாமல் இது தொடர்பான அறிவினை பெற்றோர்களும் கொண்டிருக்க வேண்டும்.

▪ பிள்ளைகளை தேவையற்ற விதத்தில் தனியே செல்வதை தவிர்த்தல் -

பிள்ளைகள் தனியே இருப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படும் பட்சத்தில் அதனை பயன்படுத்தி தவறாக நடப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாக காணப்படுகிறது. குறிப்பாக வீடுகளிலோ அல்லது பிற இடங்களில் சிறுவர்கள் தனியே இருப்பதற்கான நேரத்தை குறைக்க வேண்டும். பெண் பிள்ளைகள் மட்டுமல்ல ஆண் பிள்ளைகளும் துஷ்பிரயோகத்திற்குட்படும் சம்பவங்கள் அதிகளவு இடம் பெறுகின்றன. எனவே சிறுவர்களுக்கான தனிமையை குறைப்பதன் மூலம் துஷ்பிரயோகத்திற்கான சந்தர்ப்பங்களை குறைக்க முடியும்.

▪ சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் மற்றும் அமைப்புக்கள் தொடர்பில் சமூகத்திற்கு தெளிவூட்டல் -

சிறுவர் பாதுகாப்பு அவர்களது உரிமைகளை பேணுதல் என்பன தொடர்பாக பல்வேறு அமைப்புக்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் பல சிறுவர் நலன் கருதி செயற்பட்டு வருகின்றது. இலங்கையை பொறுத்தமட்டில் பல்வேறு பிரிவினரும் செயற்பட்டு வருகின்றனர். சிறுவர் உரிமை மீறல் மற்றும் அவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான சட்டங்கள் தொடர்பான அறிவு பலரிடத்தே காணப்படுவதில்லை, இதனால் தான் அதிகளவு துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன.




சட்டத்தால் தண்டிக்கப்படுவோம் என்பதை அறியாமல் பலர் பிழையான வழியில் செயற்படுகிறார்கள். மேலும் சிறுவர்களுக்கான துஷ்பிரயோகங்கள் இடம்பெறும் பட்சத்தில் அடுத்த கட்டம் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பில் தெளிவுகள் இல்லாததாலேயே பல சம்பவங்கள் வெளிச்சத்திற்கு வருவதில்லை. சிறுவர் பாதுகாப்பு தொடர்பான போதிய விளக்கங்களை சமூகத்திற்கு கொடுக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. இதன் மூலம் சிறுவர்களை பாதுகாக்க முடியும்.

இலங்கையை பொறுத்தமட்டில் சிறுவர்களுக்கு சாதகமான மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்குதலையும் நோக்கமாக கொண்டு இயங்கும் அமைப்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (NCPA) காணப்படுகிறது. சிறுவர்களுக்கெதிரான துஷ்பிரயோகங்களை முறைப்பாடு செய்வதன் ஊடாக அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். 1929 எனும் இலக்கத்தை தொடர்பு கொண்டு புகாரளிக்க முடியும்.

எனவே சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் ஏற்பட ஏதுவான காரணிகளை இனம்கண்டு அவற்றை இல்லாமல் செய்வதன் ஊடாகவும் பிள்ளைகள் மீது பெற்றோர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுவதன் மூலம் இயன்றளவு துஷ்பிரயோகங்களை தவிர்க்கவும் முடியும்.



**"சிறுவர்களுக்கெதிரான உரிமை மீறல்களை களைந்து எதிர்கால சமூகத்தை பாதுகாப்பானதாக கட்டியெழுப்புவோம்"**



# இராவணன் – அறிவும் ஆட்சியும் இணைந்த மனிதச் சிந்தையின் மறுமொழி

நடராசா கோபிராம்
உளவியல்சிறப்புக்கலைமாணவன்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

இராவணன் என்ற பெயர் கேட்டவுடனே உலக இலக்கிய வரலாற்றில் ஒரு அதிசய ஆளுமை நினைவிற்கு வருகிறது. இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் பரவிய புராணங்களிலும் வரலாற்றுச் சான்றுகளிலும் இராவணன் ஒரே நேரத்தில் ஒரு பேரரசர், இசைஞானி, வீரர், தத்துவஞானி, சமூக சீர்திருத்தவாதி, உளவியல்சார் வல்லுநர் என பல வடிவங்களில் வெளிப்படுகிறார். ஆனாலும், சீதையை தூக்கிச் சென்றவன், இராமனால் கொல்லப்பட்டவன், பத்து தலைகள் கொண்டவன் என வரலாற்றை மூன்று வரிகளுக்குள் முடிக்கும் சிலர் உள்ளனர்,. “கலை பத்தில் தலை சிறந்தவன் இராவணன்“ என்பதை அறியாமலும், அவனின் உண்மையான வரலாற்றை தெரியாமலும் வரலாற்றை தவறுதலாகவும், திரிபாகவும் பயன்படுத்துகின்றனர்.

இன்று இலங்கையின் தெற்கிலும் வடக்கிலும் உள்ள பழங்கால சிதிலங்கள், கலைச் சின்னங்கள், மலைப்பகுதிகளில் காணப்படும் கல்வெட்டுகள் அனைத்தும் அவன் ஆட்சியின் அடையாளங்களாகக் கருதப்படுகின்றன. இராவணனின் வாழ்க்கை என்பது ஒரு மாபெரும் உளவியல் ஆராய்ச்சி பொருளாகவும், கலாச்சாரப் பெருமையாகவும் திகழ்கிறது.

### வரலாற்றுப் பின்னணி மற்றும் ஆட்சிக் காலச்சுவடு

இராவணன் (இன்றைய இலங்கை) ஆட்சி செய்தது பற்றிய குறிப்புகள் இராமாயணத்தில் காணப்பட்டாலும், பல இலங்கை மரபுக் களஞ்சியங்களிலும் இராவணனை ”லங்காதேசத்தின் முதல் முழுமையான நாகரிக ஆட்சியாளர்” என்று குறிப்பிடுகின்றன. அவன் ஆட்சிக்காலம் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பு என சில ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர். அந்தக் காலத்திலேயே அவர் ஒரு நவீன ஆட்சிமுறை, கல்வி, கலை, தொழில்நுட்பம், சமூகநீதி, பெண்களின் நிலை, உயர்வு போன்ற பல துறைகளில் புதுமைகளை அறிமுகப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

அந்தக் காலத்திலேயே லங்கா எனப்படும் ராஜதானி பொற்கோட்டையாக இருந்தது. அதில் விமானங்கள் தரையிறங்கும் தளங்களும், பொன் கூரைகளால் ஆன அரண்மனைகளும், நீர்த்தேக்கங்களும், கல்வியமைப்புகளும் இருந்ததாகப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. தொல்லியல் ஆராய்ச்சிகளிலும் “Sigiriya”, “Ritigala”, “Dondra” போன்ற இடங்கள் இராவண காலத்தின் நினைவுச் சின்னங்களாகக் கருதப்படுகின்றன.

### இராவணனின் ஆட்சிப் பெருமைகள்

இராவணனின் ஆட்சி “அறம், அறிவு, அருள்” என்ற மூன்றின் அடிப்படையில் இயங்கியது என்று இலங்கை பழம்பெருமை மரபுகள் கூறுகின்றன. அவர் மக்கள் நலனில் மிகுந்த ஆர்வமுடையவர். சமூக அமைப்பில் வர்க்கப் பாகுபாடு குறைவாக இருந்தது வித்தியாசமான குலம், மதம், இனத்தைச் சேர்ந்தவர்களுக்கும் சமமான உரிமை கிடைத்தது. கல்வி அனைவருக்கும் திறந்திருந்தது. இது அந்தக் காலத்தில் ஒரு புரட்சிகரமான மாற்றம்.

அவர் சுகாதாரத்துறையில் மூலிகை வைத்தியத்தை ஊக்குவித்தார். “அயுர்வேதத்தின் தந்தை” என்ற பெயரும் சில ஆய்வாளர்களால் அவருக்கே வழங்கப்படுகிறது. Ravana Samhita எனப்படும் நூல் இதற்குச் சான்று. அவன் ஆட்சியில் நிலம், நீர், காடு ஆகியவை மக்கள் சொத்தாகக் கருதப்பட்டன. “நிலம் விற்பனை செய்யக் கூடாது, அது தலைமுறையினருக்குச் சொந்தமான புனிதப் பொருள்” என்ற கருத்தை அவர் முன்னிறுத்தினார். இது இன்றைய சுற்றுச்சூழல் சிந்தனைக்கு இணையானது.

அவரது நிர்வாகம் மிகச் சீர்மையாக இருந்தது. நீதிமன்றங்களில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம வாய்ப்பு இருந்தது. குற்றவாளிகளை தண்டிக்கும் முன் உளவியல் ஆய்வு செய்து தீர்ப்பு வழங்கியதாகவும் கூறப்படுகிறது. இது இராவணன் ஒரு Psychological Ruler என்பதற்குச் சிறந்த சான்று.

### கலை, அறிவியல், மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு

இராவணன் இசை, இலக்கியம், யாகம், வானியல், மருத்துவம் போன்ற அனைத்து கலைகளிலும் சிறந்து விளங்கியவர். ”கலை பத்தில் தலை சிறந்தவன்” என்ற பெயரும் உண்டு. அவர் ஒரு சாமர்த்தியமான வீணை வாத்தியக்காரர். அதனால் “ராவணாஸ்த்ரி” எனப்படும் இசைக்கருவி உருவானது. அது இன்று “சாரோத்” அல்லது “வீணை” என்பதன் முதன்மையான வடிவமாகக் கருதப்படுகிறது.

அவர் வானியல், விமானவியல் மற்றும் உளவியல் துறைகளில் ஆராய்ச்சி செய்தார் என்று Ravana Samhita குறிப்பிடுகிறது. “Pushpaka Vimana” எனப்படும் வானூர்தி தொழில்நுட்பத்தின் முதல்நிலை வடிவமைப்பு அவரது அறிவின் விளைவு என நம்பப்படுகிறது. இன்று இலங்கையில் “Ravana 1 Satellite” எனும் செயற்கைக்கோள் திட்டம் இதன் நினைவாக பெயரிடப்பட்டது. இது அவரது அறிவியல் மரபு இன்னும் உயிருடன் இருப்பதற்கான சான்றாகும்.

அவரது கலைப்பற்றும் அதே அளவில் சிறந்தது. இலங்கையின் பழங்காலக் கோவில்களில் காணப்படும் சிற்பங்கள், இராவணனின் அழகியல் பார்வையை வெளிப்படுத்துகின்றன. சிற்பங்களில் மனித உடலின் உணர்வுகள், முகபாவங்கள், மற்றும் மனநிலையை வெளிப்படுத்தும் உளவியல் துல்லியம் காணப்படுகிறது. இது இராவணன் கலை மற்றும் உளவியலின் உறவை நன்கு புரிந்திருந்தார் என்பதைக் காட்டுகிறது.



### வீரமும் போர்திறனும்

இராவணன் ஒரு அசாதாரண போர்வீரர். அவனது யுத்த

நுணுக்கம், ஆயுதவியல் திறமை, தந்திரநயம் அனைத்தும் அந்நாளைய அரசர்களை முந்தியது. அவன் பத்து தலைகள் கொண்டவன் என புராணம் குறிப்பிடப்படுவது ஒரு உளவியல் குறியீடாகும். பல்திறனும்-பலசிந்தனையும் கொண்ட ஒரு ஆளுமை எனப் பொருள்படும்.

அவர் சகோதரர்களில் பெரும்பாலானோர் போர் மற்றும் நிர்வாகத் துறைகளில் முக்கிய பங்காற்றினர். இராவணன் தன் சகோதரன் கும்பகர்ணனின் அறிவையும், வலிமையையும் மதித்தார் இதுவே அவரது leadership psychology- யின் அடையாளம். தலைமை என்பது தனி ஆளுமை அல்ல, குழுவின் ஒருங்கிணைப்பு என அவர் உணர்ந்தார்.

போரில் எதிரிகளை வெறுக்காமல், அவர்களின் மனநிலையை அறிந்து எதிர்கொள்வது அவனது முக்கிய உளவியல் திறமையாகும். இராமனுடன் நடந்த போரிலும் அவர் மரியாதையை இழக்காமல் இறந்தார். இதுவே "வீரமரணம்" என்ற பண்பாட்டுச் சிந்தனையின் அடிப்படையாகி, இலங்கையின் வீர மரபில் முக்கிய இடம் பெற்றது. அவன் வாழ்நாளில் முகம் இருந்த பிரகாசத்தை விட இறந்து வீழ்ந்த போது அதனை விட மூன்று மடங்கு முகம் பிரகாசமாக இருந்தது இது அவனின் வீரத்தின் மிகச்சிறந்த தன்மையை காட்டுகின்றது.

## உளவியல் மற்றும் ஆளுமை ஆய்வு

இராவணன் ஒரு உளவியல்சார் ஆளுமை. அவரது ஆட்சித் திறனும், கல்விக்கான பார்வையும், மனித மனத்தின் இயல்பை அறிந்து ஆட்சி செய்வதுமான பாணியும் இதற்குச் சான்று. Ego Strength>Leadership Psychology> Empathy> Moral Intelligence ஆகிய பல நவீன உளவியல் கூறுகளை அவரது வாழ்க்கையில் காணலாம்.

அவரது குரு உளவியல் மற்றும் தத்துவத்தில் வல்லவர். அவரிடமிருந்து இராவணன் "மனித உணர்வுகளின் பரிமாணங்கள்" குறித்த ஆழ்ந்த அறிவைப் பெற்றதாக Shastraic ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. "மனிதன் உணர்வுகளை அடக்கி அறிவை வளர்க்க வேண்டும்" என்பது அவரது தத்துவமாக இருந்தது.

அவரது கோபம், ஆணவம் போன்ற குணங்கள் சில நேரங்களில்

அவரை வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தாலும், அவற்றும் உளவியல் பார்வையில் “OverconÞdence Syndrome” மற்றும் “Narcissistic Leadership” எனப்படும் நவீன உளவியலின் பகுப்பாய்வுகளுக்குச் சான்றாகின்றன. இதனால் இராவணனின் வாழ்க்கை positive and negative leadership psychology இரண்டிற்கும் ஒரு ஆய்வுப் பொருளாக விளங்குகிறது.

### சமூக மற்றும் கலாச்சார தாக்கம்

இராவணன் சமூக ஒற்றுமை, கல்வி, பெண்கள் நிலை, விலங்குகள் பாதுகாப்பு, இயற்கை மதிப்பு ஆகியவற்றை முன்னிறுத்தியவர். அவர் Veda>Ayurveda>Natya Shastra போன்ற பல துறைகளிலும் பெண்களுக்கு கல்வி வாய்ப்பளித்தார். பெண்கள் அவரது காலத்தில் அரசியல் அறிவில் வல்லவர்களாக இருந்தனர். இது அந்தகால சமூக முன்னேற்றத்தின் அடையாளமாகும்.
இன்றைய இலங்கை கலாச்சாரத்தில் இராவணனின் சின்னங்கள் பல இடங்களில் திகழ்கின்றன . Ella Ravana Falls> Ravana Cave>Ravana Ella Temple போன்றவை அந்த மரபின் அடையாளங்கள். அவை சுற்றுலா வளர்ச்சிக்கும், கலாச்சார விழிப்புணர்வுக்கும் உதவுகின்றன. இது “சூழலுடன் இணைந்த வரலாற்று மனவியல்” (eco-historical psychology) எனப்படும் துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும்.

இராவணனை “தீயவன்” என சித்தரித்த சில புராணங்கள் இருந்தாலும், இலங்கை மக்களின் பார்வையில் அவர் ஒரு வீரமும் அறிவும் ,ணைந்த தேசத் தலைவர். இது சமூகவியல் பார்வையில் “cultural re-framing” எனப்படும் சிந்தனை மாற்றத்தின் உதாரணமாகும். அதாவது ஒரு மனிதனின் வரலாற்றை மக்கள் தங்கள் கலாச்சார அடிப்படையில் மறுபரிமாணம் செய்யும் செயல்முறை.

### இராவணனின் மதுச்சார்ந்து மற்றும் துத்துவப் பார்வை

இராவணன் ஒரு சிவபக்தர். “சிவ தாண்டவ ஸ்தோத்ரம்” எனப்படும் புகழ்பெற்ற பாடல் அவரால் இயற்றப்பட்டது. அந்தப் பாடல் தத்துவ, உளவியல் மற்றும் ஆன்மீக சிந்தனைகளின் கலவையாக உள்ளது. அதில் “ஆழ்ந்த தியான நிலை, உடல், மனம் இணைப்பு, தத்துவம் மூலம் சுய உணர்வு” ஆகிய மனவியல் அடிப்படைகள் காணப்படுகின்றன.

அவரது பக்தி ஒரு உளவியல் தியான முறையாகும். mind-body integration. அவர் ஆன்மீகத்தின் மூலம் தன்னிலையை மேம்படுத்தினார். இது யோக தத்துவத்தின் முன்னோடி சிந்தனை எனலாம். அவர் தன் உள்ளுணர்வை அடக்கும் முயற்சியில் தோற்றாலும், அந்தப் போராட்டம் மனிதனின் மனநிலையின் பிரதிபலிப்பாகும். இதுவே ,ராவணனை “மனிதத்தன்மையின் உச்சநிலையும், வீழ்ச்சியையும் ஒரே உடலில் வெளிப்படுத்தியவர்” என அழைக்கச் செய்கிறது.

## இலங்கை மற்றும் உலக மனதில் இராவணனின் நிலை

இன்று இலங்கையில் இராவணனை ஒரு கலாச்சாரப் பெருமையாகக் கொண்டாடுகின்றனர். ஆண்டுதோறும் “Ravana Festival” நடத்தப்படுகிறது. இது கலாச்சாரம், சுற்றுலா, சமூக ஒருமை ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் விழாவாகும். அதில் அவரது ஆட்சியின் உளவியல் மதிப்புகள், கல்வி மற்றும் சமாதானத்தின் சிந்தனைகள் வெளிப்படுகின்றன.

இராவணனின் பெயரில் பல கல்வி நிறுவனங்கள், ஆய்வு மையங்கள் இயங்குகின்றன. “Ravana Research Foundation”, “Ravana Aeronautics” போன்ற அமைப்புகள் அவரது அறிவியல் பாரம்பரியத்தை தொடர்கின்றன. இது கடந்த கால நாகரிகத்தின் உளவியல் ஆழத்தையும் அறிவியல் சிந்தனையையும் மீட்டெடுக்கும் முயற்சியாகக் கருதப்படுகிறது.

நவீன உறவியல் பார்வையில், இராவணன் “Complex Personality Structure” உடையவர். அவர் Introversion மற்றும் Dominance இரண்டையும் கொண்டவர். அவரிடம் Leadership traits மற்றும் Creative Intelligence மிகுந்தன. ஆனால் அவரின் Emotional Regulation குறைவானது அவரது வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய உளவியல் பாடம் அறிவு, ஆற்றல், தெய்வ பக்தி இருந்தாலும், உணர்ச்சி கட்டுப்பாடில்லையெனில் வீழ்ச்சி தவிர்க்க முடியாது. இது இன்றைய அரசியல் தலைவர்களுக்கும், சமூக மாற்றத்திற்கும் பொருந்தும் ஆழ்ந்த உளவியல் உண்மை.
இராவணன் வெறும் புராணக் கதாபாத்திரமல்ல் வரலாற்று நாயகன் அவர் ஒரு கலாச்சார அடையாளம், உளவியல்சார் சின்னம், சமூக

முன்னேற்றத்தின் தத்துவம். அவர் செய்த சிலபிழைகள் மனிதனின் இயல்பை பிரதிபலிக்கின்றன் அவர் சாதித்த மகத்தான செயல்கள் மனிதனின் திறனை பிரதிபலிக்கின்றன.

இலங்கையின் மண்ணில் அவர் விட்டுச் சென்ற மரபு, ஆட்சியின் நேர்மை, அறிவின் பெருமை, கலைக்கான மதிப்பு, பெண்களின் மரியாதை, இயற்கையின் பாசம், மனநிலையின் ஆழம் என அனைத்தும் இன்றைய உலகத்திற்கே வழிகாட்டியாகின்றன.

இராவணன் எனும் பெயர் நம் மனதில் "அழிவு" அல்ல, "அறிவு" எனப் பதிய வேண்டும். அவர் செய்த பல்வேறுபட்ட செயல்களிலிருந்து நாம் உளவியல் கற்றுக் கொள்ள வேண்டும் அவர் உருவாக்கிய சிந்தனைகளிலிருந்து நாம் சமூக நன்மை வளர்த்துக்கொள்ள வேண்டும். காலம் உள்ள வரைக்கும் இராமன் பேசப்பட்டு கொண்டிருப்பானானால் அவனை எதிர்த்த இராவணனும் பேசப்பட்டுக் கொண்டுதான்இருப்பான். இராவணன் எப்போதும் இரங்கத்தக்கதன் இல்லை, கோவில் கட்டி வணங்கத்தக்கவன்.

அதனால் தான் இன்று உளவியல், வரலாறு, சமூகஅறிவு, கலாச்சாரம் அனைத்திலும் இராவணன் என்ற பெயர் ஒரு நிலைமையின் பிரதிநிதி அல்ல, தமிழரினதும், தமிழ்நாகரிகத்தினதும் பிரதிநிதி!.



# நவராத்திரி விரதம் – மனநலமும் பிரயோக உளவியலும்

நடராசா கோபிராம்
உளவியல்சிறப்புக்கலைமாணவன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம

(ஒன்பது நாட்கள் ஒழுக்கம், கவனம், அமைதி வளர்க்கும் ஒரு புனிதப் பயணம்.)

ஒன்பது இரவுகள், ஒளி மற்றும் ஒழுக்கம் சேர்ந்து,
மனம் தெளிவு, சிந்தை அமைதி பெறும் பயணம்.
விரதம் – பசியை தவிர்ப்பது மட்டும் அல்ல,
உள்ளத்தின் ஆசைகள் கட்டுப்படும் கலைப்பயிற்சி.

உண்ணாவிரதம் உடலைச் சுத்தம் செய்ய,
ஜெபம், பஜனை, தியானம் மனதை ஒன்றில் நிறுத்தும்.
சிந்தையின் சிதறல் மென்று போய்,
கவனம், மனநிலை, புத்துணர்வு மலரும்.

ஒவ்வொரு நாளும் ஒழுக்கத்தை வளர்க்கும்,
மன அழுத்தம் கரைந்து போகும்.
ஒளி, பக்தி, மற்றும் ஆன்மீக சிந்தனை,
மனவளர்ச்சிக்கும் ஆன்மீக பலம் தரும்.

நவராத்திரி – பக்தி மட்டும் அல்ல,
பிரயோக உளவியலின் மறைமுகப் பாடசாலை!
விரதத்தின் ஒவ்வொரு நிமிடம்,
உளவியல் மருந்து போல மனம், உடல்,
ஆன்மாவை சுத்தம் செய்கிறது.



## ஆத்ம சாந்தி பிரார்த்தனை



எமது தூமி அமையத்தின் ஆரம்ப காலம் முதல் எமக்கு பல வழிகளில் உறுதுணையாக இருப்பதோடு, தொழில்நுட்ப ஆலோசகராகவும் சேவையாற்றுகின்ற பொறியியலாளர் திரு க. சுதாகர் அவர்களுடைய தந்தையார் அமரர் வீரகத்தி கயிலாயபதி அவர்கள் 12.11.2025 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்று உள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாருடைய ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

## இதய அஞ்சலி



இணுவில் மண்ணின் மைந்தரும், சமூகத்துக்குச் சிறந்த கல்விச் சேவையாற்றியவருமான திரு. சின்னத்துரை இரத்தினசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரம் அடைகிறோம். ஆசிரியர் என்ற புனிதப் பணியின் மூலம் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு அறிவொளி ஏற்றிய பெருமைக்குரியவர் இவர். இவரது மறைவு, கல்விச் சமூகம் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் ஒரு பெரியதொரு இழப்பாகும்.

இ. சர்வேஸ்வரா (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்) அவர்களின் அன்புத் தந்தையான திரு. இரத்தினசிங்கம் அவர்கள், தளர்வின்றித் தர்ம சிந்தனையுடன் வாழ்ந்தவர். அவரது பண்பும், அவர் ஏற்படுத்திய தாக்கமும் என்றும் நினைவில் நிற்கும்.

அன்னாரைப் பிரிந்து வாடும் அன்பு மகன் இ. சர்வேஸ்வரா, குடும்பத்தினர், உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த ஆறுதலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். துயரத்தின் இந்தக் கடினமான தருணத்தில், அவரது நினைவுகள் உங்களுக்கு மன பலம் அளிக்கட்டும். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.


அபயம்
இரகசியம் பேணும்
இலவச வைத்திய தொலைபேசி அழைப்பு சேவை
071 071 2345
மனநெருக்கீடுகளில்
இருப்பவர்களுக்கு உடனடி தொலைபேசி
வைத்திய ஆலோசனை வழங்கும் சேவை
துறை சார் மருத்துவர்களும் ,
குழுவினரும் உங்களை ஆறுதல் படுத்தி
தீர்வு காண்பதற்கு / வழிகாட்டுவதற்கு
தயாராக உள்ளனர் .
ஒரு நாளில் (24 மணி நேர இரவு பகல் சேவை)
எந்தநேரமும் ஒரு வைத்தியரை உடனடியாக
தொடர்பு கொள்ளலாம்
மனநெருக்கடிகளுக்கு உள்ளானவர்களை
காண்பவர்கள் இத் தொலைபேசி சேவையை
பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துங்கள்.
தங்களால் வழங்கப்படும் சுயவிபரங்கள் அனைத்தும்
இரகசியமாக பேணப்படும்
ABAYAM
அபயம்
அபயம் - கல்வி மற்றும் உடல் நலம் சார்ந்த அறக்கட்டளை அமைப்பு






இந்தியன் பிரீமியர் லீக் (IPL) வரலாற்றில் மிகவும் ஆச்சரியமளிக்கும் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பரிமாற்றங்களில் ஒன்றாக, ஐபிஎல் 2026 சீசனுக்கு முன்னதாக, நட்சத்திர வீரர்களான ரவீந்திர ஜடேஜா மற்றும் சஞ்சு சாம்சன் ஆகியோர் தங்கள் அணிகளை மாற்றியுள்ளனர்.

நீண்ட காலமாக சென்னை சூப்பர் கிங்ஸ் (CSK) அணியின் தூணாக இருந்த ஜடேஜா ராஜஸ்தான் ராயல்ஸ் (RR) அணிக்கும், ராஜஸ்தான் ராயல்ஸின் கேப்டனாக இருந்த சாம்சன் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கும் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## தோணியின் இடத்தை ஈடு செய்வாரா சாம்சன்



ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் விக்கெட் கீப்பர்-பேட்ஸ்மேனான சஞ்சு சாம்சன், 18 கோடி ரூபாய்க்கு சென்னை சூப்பர் கிங்ஸ் (CSK) அணிக்கு வர்த்தகம் செய்யப்பட்டுள்ளார். சாம்சனை வர்த்தகம் செய்தது, CSK-வின்

நீண்ட காலத் தேவையைப் பூர்த்தி செய்ய எடுக்கப்பட்ட ஒரு மூலோபாய நடவடிக்கையாகப் பார்க்கப்படுகிறது. அணியின் நிர்வாக இயக்குனர் காசி விஸ்வநாதன், CSK-வுக்கு அனுபவம் வாய்ந்த இந்திய டாப்-ஆர்டர் பேட்ஸ்மேன் தேவை என்று வெளிப்படையாகத் தெரிவித்தார். குறிப்பாக, எதிர்காலத்தில் எம்.எஸ். தோனியின் இடத்தை நிரப்பும் ஒரு சிறந்த இந்திய விக்கெட் கீப்பர்-பேட்ஸ்மேனைத் தேடும் CSK-வின் திட்டத்தில் சாம்சன் சரியாகப் பொருந்துவார்.

ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் உரிமையாளர் மனோஜ் படேல், சாம்சன் அணியில் இருந்து விலக விரும்பியதற்கு ஒரு கடினமான சீசனுக்குப் பிறகு அவர் உணர்ச்சி ரீதியாக மிகவும் சோர்வடைந்து இருந்ததைக் காரணம் காட்டினார். கிட்டத்தட்ட ஒரு தசாப்த காலமாக ராஜஸ்தான் அணிக்காகப் பணியாற்றிய பிறகு, சாம்சன் புதிய அத்தியாயத்தைத் தொடங்க விரும்பியுள்ளார். CSK-வில் தோனியுடன் விளையாடும் தனது விருப்பத்தை நிறைவேற்றுவதாகவும் சாம்சன் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

## ஆரம்பித்த இடத்திலேயே முடிக்க போகிறாரா ரவீந்திர ஜடேஜா?




சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் மிக முக்கியமான ஆல்-ரவுண்டரான ரவீந்திர ஜடேஜா, ராஜஸ்தான் ராயல்ஸ் (RR) அணிக்கு வர்த்தகம் செய்யப்பட்டுள்ளார். இந்த வர்த்தகத்தில், ஜடேஜாவுடன்



CSK ஆல்-ரவுண்டர் சாம் கர்ரன் அவர்களும் RR அணிக்குச் செல்கிறார். ஜடேஜா 12 சீசன்களாக CSK-வின் வெற்றிக்கு முக்கியப் பங்காற்றியவர். அவரை விடுவிப்பது அணியின் வரலாற்றிலேயே எடுக்கப்பட்ட மிகவும் கடினமான முடிவுகளில் ஒன்று என்று CSK நிர்வாகம் தெரிவித்துள்ளது. CSK-வின் எதிர்கால அணி கட்டமைப்பைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும், வெள்ளைப்பந்து கிரிக்கெட்டில் தனது கரியரின் இறுதிக் கட்டத்தில் இருக்கும் ஜடேஜாவும் இதற்குச் சம்மதம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு இது ஒரு "வீட்டிற்குத் திரும்புதல்" போல் அமைந்துள்ளது. ஏனெனில் ஜடேஜா தனது முதல் ஐபிஎல் சீசனை (2008) RR அணியில்தான் ஷேன் வார்ன் தலைமையில் தொடங்கினார். RR அணிக்கு அனுபவமிக்க ஒரு இந்திய வீரர் மற்றும் ஆல்-ரவுண்டர் தேவை என்ற இடைவெளியை ஜடேஜா பூர்த்தி செய்கிறார். RR அணியில் ஜடேஜாவுக்கு கேப்டன் பொறுப்பு வழங்கப்படலாம் என்றும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இது ராஜஸ்தான் ராயல்ஸுக்கு ஒரு வலுவான இந்திய தலைமைத் தேர்வை வழங்கும்.

இந்த அதிரடியான பரிமாற்றங்கள் இரு அணிகளுக்கும் புதிய பரிமாணங்களைத் திறந்துவிட்டன. இந்த வர்த்தகம், இரு அணிகளுக்கும் ஒரு மாற்றத்தின் கட்டமாக பார்க்கப்படுகிறது. ஐபிஎல் 2026-க்கான மினி-ஏலத்திற்கு முன்னதாக, இந்த முக்கியமான வீரர்கள் தங்கள் புதிய அணிகளின் வெற்றியில் எவ்வாறு பங்களிக்கப் போகிறார்கள் என்பதைப் பார்க்க ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

